**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,                                                                                    தேதி: 07.03.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தொழில் முனைவோருக்கு வேளாண் தொழில் நிறுவுவதற்கான பயிற்சி

வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, தமிழ்நாடு நீர் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் தொழில் முனைவோருக்கு வேளாண் தொழில் நிறுவுவதற்கான பயிற்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள தொழில் நுட்பவணிக காப்பகம், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில் 06&07.03.2023 அன்று நடைபெற்றது..

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு மையத்தின் இயக்குநர், முனைவர் தே.சுரேஷ் குமார், அவர்கள் பயிற்சியை துவக்கி வைத்து வேளாண் வணிகத்திற்கான வாய்ப்புகளை குறித்து விரிவுரை வழங்கினார். தொழில் நுட்பவணிக காப்பகத்தின் தலைமை செயல் அதிகாரி, திரு.A.V.ஞானசம்பந்தம், அவர்கள் வரவேற்புரையாற்றினார். விவசாய மற்றும் கிராமப்புற மேலாண்மையின் இணைப் பேராசிரியர், முனைவர் M.மலர்கொடி நன்றியுரை ஆற்றினார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த துறைகளிலிருந்து 30 தொழில் முனைவோர்கள் இப்பயிற்சியில் பங்கு பெற்றனர். வணிகத்திட்டம் தயாரித்தல், வணிகத்திற்கான செலவு பகுப்பாய்வு, முதலீட்டுத் திட்டம், தொழில் நுட்பவணிக காப்பகத்தின் செயல்பாடுகள், வணிகம் சார்ந்த சேவைகள், உணவு பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டல் போன்ற தலைப்புகளை மையமாகக் கொண்டு இப்பயிற்சியானது நடைபெற்றது.

தொழில்நுட்ப வணிக காப்பகத்தின் தொழில் முனைவோர்கள் தங்களின் தொழில் முனைவோர் பயணத்தை பயிற்சியாளர்களிடம் பகிர்ந்து கொண்டனர். இப்பயிற்சிக்கு பின் இறுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சியாளர்களுக்கு ரூ.5.00 இலட்சம் வரையிலான கடனுதவியும் ரூ.2.00 இலட்சம் வரையிலான மானியமும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும். மேலும் இத்திட்டத்தின் கீழ் இவ்வகை பயிற்சியானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழம் தொழில்நுட்ப உதவியுடன் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட உள்ளது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**